# இஸ்லாத்தில் நீதிப் பரிபாலனம்: நீதிமன்றக் கட்டமைப்பு பற்றிய ஒரு வரலாற்றுப் பார்வை

[1]எம்.ஜ.எம்.ஜஸீல், [2]எம்.பீ.பௌசுல்,

இஸ்லாமிய கற்கைகள் துறை, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
இஸ்லாமிய கற்கைகள் துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்.

jazeelmi@seu.ac.lk / mjazeel@hotmail.com, fowzulbuhary@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

நீதி, நீதிப் பரிபாலனம் என்பன இஸ்லாத்தில் மிக முக்கிய கூறுகளாகும். எனவே, நீதிமன்றம் எனும் நிருவனப்படுத்தல் ஊடாகவே இஸ்லாமிய வரலாற்றில் நீதிப் பரிபாலனம் செய்யப்பட்டுள்ளது. எனவே, இஸ்லாத்தின் முன்னோடிக் காலம் முதல் நீதித்துறையின் பரிபாலன ஒழுங்கு, கட்டமைப்பு, அது பெற்ற பரிணாம வளர்ச்சி என்பவற்றைப் பரிசீலித்தலை இவ்வாய்வு இலக்காகக் கொண்டுள்ளது. பண்புசார் முறைமையிலான இவ்வாய்வு இஸ்லாமிய வரலாற்றில் நீதிப் பரிபாலனம் பற்றிய ஆக்கங்கள் மீதான மீளாய்வு, பகுப்பாய்வினை அடிப்படைகளாகக் கொண்டுள்ளது. எனவே, இஸ்லாமிய நீதிப் பரிபாலனம், பல்வேறு ஒழுங்கமைப்புகளைக் கொண்ட நீதிமன்ற கட்டமைப்பைப் பெற்றிருந்தது என்பது இவ்வாய்வின் பிரதான கண்டறிதலாகும். இதனால், இவ்வாய்வை தற்கால காழி நீதிமன்ற முறைமையின் சிறந்த கட்டமைப்பிற்கான அல்லது மீள் புனர்நிர்மானத்திற்கான வழிகாட்டியாகக் கொள்ளலாம்.

பிரதான சொற்கள்:இஸ்லாத்தில் நீதி, நீதிப் பரிபாலனம், நீதிமன்றம், நீதிமன்றக் கட்டமைப்பு

## அறிமுகம்

இஸ்லாத்தில் நீதி எனும் எண்ணக்கரு அதன் பிரதான அடிப்படைகளில் ஒன்று. நீதிமன்றமும் நீதிபதியின் தீர்ப்புகளும் அவற்றின் அமுலாக்கமும் நீதியைப் பரிபாலிக்க துணை செய்யும். இந்தவகையில் நீதிமன்றம் அதன் கட்டமைப்பு தொடர்பில் இஸ்லாத்தின் கரிசனை வலுவானதாகும். நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட நீதிமன்ற செயற்பாட்டின் மூலமே மானிட நலன், உரிமைகள், சமத்துவம், கௌரவம், சுபீட்சம் போன்றன உத்தரவாதப்படுத்தப்படுகின்றன. ஆகவே, இஸ்லாமிய வரலாற்றில் நீதிமன்றம் எனும் நிருவனம் பரிணாம வளர்ச்சியைப் பெற்று வந்துள்ளது. இவ்வாய்வு நீதிமன்ற முறைமை, நீதிபதியின் நியமனம், அவரது நியாயாதிக்க எல்லைகள், நீதிமன்றம், முறைப்பாடுகளை விசாரணை செய்தல் என்பன பற்றி வரலாற்றுக் கண்ணோட்டத்தில் பரிசீலிக்கின்றது. இஸ்லாத்தின் மூல ஆவணங்களான அல் குர்ஆன், அஸ்ஸுன்னா, பிரதான இமாம்களின் கருத்துக்கள், இஸ்லாமிய வரலாற்று அனுபவம், நவீன இஸ்லாமிய சிந்தனையாளர்களின் கருத்துக்கள் என்பன இவ்வாய்விற்கான அடிப்படைகளாக அமைகின்றன.

## ஆய்வு முறைமை

இஸ்லாத்தில் நீதிப் பரிபாலனம் பற்றிய ஆக்கங்கள் மீதான மீளாய்வு, பகுப்பாய்வை இவ்வாய்வுக் கட்டுரை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அறபு மொழியில் அமைந்த ஆக்கங்கள் இவ்விடயத்தைப் பெரும்பாலும் கோட்பாடு ரீதியாகவே நோக்க முற்படுகின்றன. இந்தவகையில் "ஆதாப் அல்-குழாத்" (நீதிபதிகளின் பண்பொழுக்கம்) எனும் ஆக்கங்கள் இஸ்லாமிய முன்னோடிக் கால நீதிமன்றச் செயற்பாடு பற்றி விபரிக்கின்றன. இவை தவிர காழி நீதிபதிகள் பற்றிய சுயசரிதைகள், 'பதாவா' வகை இலக்கியம் போன்றனவும் உமைய, அப்பாஸிய, சிற்றரசுகள் கால நீதிமன்ற முறைமைகளையும் குறிப்பிடுகின்றன. நீதிமன்றக் கட்டமைப்பு பற்றிய உஸ்மானிய ஆட்சிக்கால பதிவேடுகள் இயல்பிலும் பரப்பிலும் முன்னேற்றகரமானவை.

## நீதிமன்றக் கட்டமைப்பு

இஸ்லாமிய நீதிமன்ற முறைமை இஸ்லாமிய ஷரீஆவின் ஒரு பகுதியாகும். நீதிப் பரிபாலனம் அல்லாஹ்வினால் விதியாக்கப்பட்ட ஒரு கடப்பாடு என்பதை அல் குர்ஆனிய வாசகங்கள் (04:58) உணர்த்துகின்றன. எனவே, சமூகத்தில் நீதியை நிலைநாட்டுதல் ஒரு சமயக் கடமை. குழுக்கள் அல்லது தனிநபர்களிடையே எழுகின்ற பிணக்குகளைத் தீர்ப்பதுவே நீதிப்பரிபாலனத்தின் குறிக்கோளாகும். எனவே, நபி (ஸல்) அவர்களுக்கு வழங்கப்பட்ட பணிகளில் ஒன்றாக நீதித்துறையும் அமைந்திருந்தது. '(முஹம்மதே!) உம் இறைவன் மேல் ஆணையாக. அவர்கள் தமக்கிடையே ஏற்பட்ட சண்டையில் உம்மை நீதிபதியாக ஏற்று, பின்னர் நீர் வழங்கிய தீர்ப்பில் தமக்குள் அதிருப்தியும்

கொள்ளாமல் முழுமையாக கட்டுப்படும் வரை அவர்கள் நம்பிக்கை கொள்ள மாட்டார்கள்' போன்ற அல் குர்ஆன் வாசகங்கள் (04:65) நபி (ஸல்) அவர்களின் நீதி செலுத்தும் பண்பினைத் தெளிவாகக் காண்பிக்கின்றன. இந்த வகையில், நபி (ஸல்) அவர்கள் இஸ்லாமிய அரசைப் பிரதிநிதித்துவப்படுத்திய முதல் நீதிபதியாகக் கொள்ளப்படுகிறார்கள்.

நபி (ஸல்) அவர்களின் மறைவை அடுத்து மதீனாவில் சட்டத்தை நிர்வகித்தல், நீதிப்பரிபாலனம் ஆகிய பணிகள் முதல் கலீபா அபூபக்ர் அவர்களிடமே காணப்பட்டது. அவர் உமர் இப்னு கத்தாப் அவர்களை நீதிபதியாக நியமித்தார் (அல்-உமரி, 2003). தூரப்பிரதேசங்களில் கவர்னர்கள் நீதிபதிகளாகச் செயற்பட்டனர். ஆயினும், கலீபா உமர் அவர்களது ஆட்சிக் காலத்தில் பெறப்பட்ட இராஜ்ய விஸ்தீரணமும் வேறுபட்ட சமூகங்களின் இஸ்லாத்தில் நுழைவும் நிர்வாகத்துறையிலிருந்து நீதித்துறை வேறுபடுத்தப்பட்டு, வெற்றி கொள்ளப்பட்ட பிரதேசங்களில் நீதிப் பரிபாலனத்திற்காக தனியான நீதிபதிகள் நியமிக்கப்படும் நிலையைத் தோற்றுவித்தது (வகீஉ, 918). இந்த வகையில், உமர் அவர்கள் நீதித்துறையையும், நிர்வாகத்துறையையும் பிரித்து வேறுபடுத்திய முன்னோடியாகக் கருதப்படுகிறார். நீதிப் பரிபாலனம் தொடர்பான உமர் அவர்களது கடிதம் இஸ்லாமிய நீதிமன்றம் தொடர்பான நியதிகளையும் நெறிமுறைகளையும் விதந்துரைக்கிறது என்கிறார் இப்ன் அல்-கய்யூம் (2002).

கிலாபா ராஷிதாவின் காலப்பிரிவின் நீதிமன்ற முறைமை எளிய வடிவமே பெற்றிருந்தது. இக்கால நீதிபதிகள் செயலாளர்களைப் பெற்றிருக்கவில்லை. மேலும் நீதிமன்றத் தீர்மானங்கள் எழுத்தில் பதிவுறவுமில்லை. நீதிபதியின் தீர்ப்பு உடனடியாக நிறைவேற்றப்பட்டது. விரிவான விதிமுறைகள், முறைப்பாடு, தண்டப்பணம் என்பனவற்றை வைப்பிலிடுதல், பணிப்பகிர்வு, ஆரம்ப கட்ட விசாரணை, குறுக்கு விசாரணை போன்றன இக்காலப்பிரிவில் தேவைப்படவில்லை (ஆயளரன நவ யட , 2006). ஆயினும், பிற்பட்ட காலங்களில் ஷரீஆவின் அமுலாக்கத்தையும், நீதித்துறையின் விரிவாக்கத்தையும் கருத்திற் கொண்டு பல மாற்றங்கள் இடம்பெற்றன.

உமைய ஆட்சியாளர்கள் தமது பிரதேசத்தில் நீதிமன்றங்களை நிறுவினர். சிக்கலான வழக்குகளில் நீதிபதிகளின் வேண்டுகோளுக்கேற்ப தமது அபிப்பிராயங்களை வழங்கினர். தமது சாம்ராஜ்யத்தின் தூரப்பிரதேச நீதிபதிகளுக்கு எழுத்து மூல அறிவுறுத்தல்களை அனுப்பி வைத்தனர் (ஆயளரன நவ யடஇ 2006). கூபா, பஸரா, புஸ்தாத் போன்ற இராணுவ நகரங்களின் உருவாக்கமே நீதிபதிப் பதவியின் தோற்றத்தோடு நேரடியாகத் தொடர்புபடுகிறது. இந்நகர்களில் வாழ்ந்த மக்களின் பிணக்குகளை அறிவார்ந்த ரீதியில் தீர்த்து, சமரசம் செய்வதற்கு நீதிபதிகளின் தேவை அவசியப்பட்டது. உமைய ஆட்சியின் ஆரம்ப காலப்பகுதியில் நீதிபதி முறைமை நன்கு நிறுவப்பட்ட ஒன்றாக மாறிவிட்டிருந்தது. இக்கால நீதிபதிகள் இராணுவ நகரங்களில் வரி அறவீட்டாளர், தொழுகை நடாத்தும் இமாம், பொதுத் திறைச்சேரியின் மேற்பார்வையாளர், நில வரி அதிகாரி ஆகியோராகவும் பணி புரிந்தனர்.

**நீதி வலயம்**

கிலாபா ராஷிதா காலப்பகுதியில் வெற்றி கொள்ளப்பட்ட பிரதேசங்களுக்கு நீதிபதிகள் நியமனம் செய்யப்பட்டமை நீதிமுறைமையில் நீதிவலயம் என்ற எண்ணக்கருவைத் தோற்றுவித்தது. இந்த வகையில், அபூ தர்தா மதீனாவுக்கும், ஷுரைஹ் பின் ஹாரித் கூபாவுக்கும், அபூ மூஸா அல்-அஷ்அரி பஸராவுக்கும், உஸ்மான் இப்னு ஹாரித் எகிப்துக்கும் நீதிபதிகளாக நியமனம் பெற்றனர் (புஆத், 1996). யமன் பிரதேசத்திற்கு அலி, பின்னர் முஆத் இப்னு ஜபல் ஆகியோரையும், மக்கா நகருக்கு உத்தாப் பின் உஸைதையும் நிர்வாகிகளாகவும், நீதிபதிகளாகவும் நபி (ஸல்) அவர்கள் நியமித்தமை கிலாபா ராஷிதா கால நியமனங்களுக்கு மாதிரியாக அமைந்து இருந்தது (டீநளறழசவா நவ யடஇ 1991).

இவ்வாறு இஸ்லாமிய ஆரம்ப காலப்பிரிவில் பிரதான நகர்களிலேயே நீதிபதிகள் காணப்பட்டனர் என்பதையும் நீதிவலயங்கள் பெரும் நிலப்பரப்பை உடையதாக அமைந்திருந்தன என்பதையும் இது எடுத்துக் காட்டுகிறது. (முழு எகிப்தும் தனியான நீதிவலயம்). பிற்காலப்பகுதியில் நீதிவலயங்கள் மக்கள் சனத்தொகை விருத்தி, இராஜ்ய விஸ்தீரணத்திற்கேற்ப ஏற்படுத்தப்பட்டன. அப்பாஸிய தலைநகர் பக்தாதின் மூன்று நீதி வலயங்களும் தனியான நீதிபதிகளைக் கொண்டிருந்தன. உஸ்மானிய ஆட்சிக் காலப்பகுதியில் நீதிவலயம் தொடர்பான சீர்திருத்தங்கள் குறிப்பிடத்தக்கவை. நீதித்துறை, விடயப்பொருள், பிரதம நீதிபதியின் நியமனம், நீதித்துறைக்கான தனியான காரியாலயங்கள் போன்றவற்றிற்கேற்ப நீதிவலயங்கள் அமைக்கப்பட்டன. மேலும், குறித்ததொரு நீதிவலயத்தில் அதன் சனத்தொகைக்கேற்ப நீதிமன்றங்களின் எண்ணிக்கை அமைந்திருந்தது. இவ்வலயத்தைச் சேர்ந்த ஒருவர் தான் விரும்பும் நீதிமன்றத்தில் முறையீடு செய்யலாம் என்பது நீதிப்பரிபாலனத்தின் விஸ்தரிப்பைக் காண்பிக்கிறது. மேலும், 'மத்ஹப்' ரீதியான நீதிமன்றங்கள் செயற்பட்டமை, குறித்த நீதிவலயத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட நீதிமன்றங்களை வேண்டி நின்றன (டீநளறழசவா நவயடஇ 1991). மம்லூக் ஆட்சியாளர்கள் நான்கு சிந்தனைப் பிரிவையும் சேர்ந்த

நீதிபதிகளை நியமனம் செய்திருந்தார்கள் என்பது நோக்கத்தக்கது. உஸ்மானிய தலைநகர் இஸ்தான்பூலில் ஐந்து நீதிமன்றங்கள் செயற்பட்ட போதும், 1585இல் சனத்தொகைக்கேற்ப புதிய நீதிமன்றமொன்றைத் திறக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

**நீதிபதியின் நியமனம்**

கிலாபா ராஷிதா காலப்பகுதியில் கலீபாவினால் நியமனம் செய்யப்பட்ட நீதிபதிகள் கலீபாவினால் அதிகாரமளிக்கப்பட்டிருந்தனர். ஒரு நீதிபதியின் நியமனமும், அதனை ஏற்றுக் கொள்தலும் குறைந்தது இருவருடைய சாட்சியத்தின் முன்னால் இடம்பெற்றது.

முஸ்லிம் ஆட்சியாளரே நீதிபதியின் நியமனம், பதவிநீக்கம், பொறுப்புக் கூறல் என்பவற்றுக்குப் பொறுப்புடையவர் (அல்-மிர்ஸபாவி, 1991). இதற்கமைய ஏற்படுத்தப்பட்ட இஸ்லாமிய மரபின்படி நீதிபதிகள் முஸ்லிம் ஆட்சியாளர்களினால் நியமனம் செய்யப்பட்டனர். உமைய ஆட்சிக்காலத்தில் நீதிபதியை நியமனம் செய்யவும் பதவி விலக்கவும் மாகாண கவர்னர்கள் அதிகாரம் பெற்றிருந்தனர். ஆரம்பகால நீதிபதிகளில் பலர் அரேபியர்களாக இருந்து தங்களின் புதல்வர்களை இத்துறையில் பயிற்றுவித்தமை சந்ததி முறையில் நீதிபதி நியமனம் இடம்பெற வழிகோலியது எனப்படுகிறது. அப்பாஸிய ஆட்சியில் நியமனம் பெற்ற நீதிபதி உள்ளூர் பிரதிநிதியாகக் காணப்பட்டார். அந்நகரில் அவர் பெற்றிருந்த பிரபலமும் மக்கள் அங்கீகாரமும் நியமனத்துக்கான மேலதிக தகைமையாக அமைந்தன எனலாம்.

அப்பாஸிய ஆட்சியாளர் அல்-மஹ்தி நீதித்துறையின் ஒழுங்கமைப்புக்கு ஒரு முக்கிய நடவடிக்கையை ஆற்றினார். கலீபாவும் அவரது கவர்னர்களும் மக்களிடமிருந்து நேரடியாக முறைப்பாடுகளைப் பெற்றுத் தீர்வு கண்டனர். முறைப்பாடுகளின் விசாரணையிலும், தீர்ப்பிலும் கலீபா அல்லது கவர்னர்களுடன் இணைந்து நீதிபதி, சட்ட நிபுணர், பாதுகாப்பு உத்தியோகத்தர், பதிவாளர், நொத்தாரிசு ஆகியோர் இருந்தனர். பாதிமிய்ய, ஸ்பெய்னின் உமைய, உஸ்மானிய ஆட்சியாளர்களே நீதிபதிகளை நேரடியாக நியமனம் செய்துள்ளனர் போலுள்ளது.

அப்பாஸிய ஆட்சிக்காலப்பிரிவில் சாம்ராஜ்யத்தின் பிரதம நீதியரசரை (காழி அல்-குழாத்) நியமனம் செய்யும் மரபு தோற்றுவிக்கப்பட்டது. இமாம் அபூ யூஸுஃப் அவர்கள் அப்பாஸிய ஆட்சியின் பிரதம நீதியரசராக நியமனம் செய்யப்பட்டார். ஆயினும், பிற்பட்ட காலத்தில் நீதி வலயங்களுக்குத் தனித்தனியான பிரதம நீதியரசர் காணப்பட்டார். இவ்வாறே, ஒவ்வொரு சிந்தனைப் பிரிவுக்கும் (மத்ஹப்) தனியானதொரு பிரதம நீதியரசர் நியமிக்கப்பட்டார். மம்லூக் ஆட்சியில் நான்கு சிந்தனைப் பிரிவினரும் தனித்தனியான பிரதம நீதியரசர்களைக் கொண்டிருந்தனர். இந்த பிரதம நீதியரசரின் சிபாரிசின் படி ஆட்சியாளர்கள் நீதிபதிகளை நியமனம் செய்தனர் (டீநளறழசவா நவயடஇ 1991). அப்பாஸிய ஆட்சிக்கால நீதிப்பரிபாலன முறை இந்தியாவின் முகலாயர்கள், ஈரானின் ஸபவிகள், மத்திய கிழக்கின் உஸ்மானியர்களினால் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்பட்டது. ஆயினும், உஸ்மானியர் பிற்பட்ட காலங்களில் நீதித்துறை முறைமை வளர்ச்சிக்குப் பங்காற்றியுள்ளனர். ஹனபி சிந்தனையை சாம்ராஜ்யத்தின் உத்தியோகபூர்வ சிந்தனைப் பிரிவாக உஸ்மானியர் பிரகடனம் செய்து, நீதிபதிகள் அதனையே மூல ஆவணமாகக் கொள்ளுமாறு ஏவப்பட்டனர்.

ஒரு நீதிபதியின் பதவிக்காலம் ஆரம்பத்தில் வரையறுக்கப் பட்டிருக்கவில்லை. ஒரு நீதிபதி தனது மரணம் வரை அல்லது அவரை நியமனம் செய்த ஆட்சியாளர் எந்நேரத்திலும் பதவி விலகச் செய்யும் வரை பதவி வகித்தார். எனினும், உஸ்மானிய காலப்பிரிவில் ஒரு நீதிபதியின் பதவிக்காலம் மூன்று அல்லது இரண்டு வருடங்களாக வரையறுக்கப்பட்டது. பதினேழாம் நூற்றாண்டின் இறுதியில் ஒரு நீதிபதியின் பதவிக்காலம் ஒரு வருடம் என்பது வழக்கமாக இருந்தது. ஏழாம் நூற்றாண்டிற்கு முதல் நியமனம் பெற்ற நீதிபதி பொதுத் திறைசேரியிலிருந்து கொடுப்பனவு பெற்றார். ஆயினும், எட்டாம் நூற்றாண்டு தொடக்கம் நிரந்தர சம்பளத்தைப் பெறத் தொடங்கினர். இந்நூற்றாண்டில் ஒரு நீதிபதியின் சராசரி சம்பளம் மாதாந்தம் முப்பது தீனார்களாக இருந்தது. நீதிப் பரிபாலனம் ஓர் உத்தியோகமாக மாறிய போது நீதிபதியின் சம்பளம் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. எட்டாம் நூற்றாண்டின் முடிவில் ஒரு நீதிபதி 165 தீனார்களை மாதாந்தம் பெற்றார்.

**நீதிமன்றம்**

இஸ்லாத்தின் ஆரம்ப காலப்பிரிவில் மஸ்ஜித்களே நீதிமன்றங்களாகவும் இயங்கின. பிற்பட்ட காலத்தில் நீதிப் பரிபாலனத்திற்காக தனியான கட்டடங்கள் ஏற்படுத்தப்பட்டன. 'மஹ்கமா' என்ற அரபுப் பதம் நீதிமன்றங்களையே குறித்து நிற்கின்றது. ஒரு நீதிபதியின் உத்தியோகபூர்வ இடமான 'மஹ்கமா' நீதி வலயத்தினுள் ஒரு நிலையான இடத்தில் அமைந்திருந்தது. அப்பாஸிய ஆட்சித் தலைநகரில் மூன்று நீதி வலயங்களுக்கான காரியாலயங்களும் பிரதம நீதியரசர் காரியாலயமும் அமையப் பெற்றிருந்தன. உஸ்மானிய ஆட்சியில் குறித்த பிரதேசத்தில் நீதிமன்றங்களின் எண்ணிக்கை கலீபாவினாலேயே நிர்ணயிக்கப்பட்டது. நீதிபதியின் விருப்புக்கேற்ப நீதிமன்றம் இடம் மாற்றப்பட அனுமதிக்கப்படவில்லை. ஒரு மாவட்டத்தின் சனத்தொகை விருத்திக்கேற்ப அல்லது புதிய சூழலின் தேவைக்கேற்ப உஸ்மானிய

ஆட்சியாளர் நீதி வலயத்தை இரண்டாகப் பிரிக்கவும், புதிய நீதி வலயத்தை உருவாக்கவும் முடிவெடுப்பார். குடிமக்களின் வசதிக்கேற்ற இடத்தில் நீதிமன்றம் அமைவது வழக்கமாக இருந்தது. பொதுவாக, ஒரு நகரில் ஜும்ஆ பள்ளிவாயல், வர்த்தக மையம் போன்றவற்றை அண்மித்தே இயங்கியது. ஏனெனில், நீதிமன்றம் எல்லோருக்கும் பரீட்சயமான இடமாகவும், இலகுவில் மக்கள் சென்று வரக்கூடிய ஒன்றாகவும் அமைய வேண்டுமென்பது இஸ்லாத்தின் நியமமாகும். குறித்த பிரதேசத்திற்கு நீதிபதி நியமனம் செய்யப்படின், அப்பிரதேசத்தில் வழங்கப்படுகின்ற தீர்ப்பே வலிதாகக் கொள்ளப்படத்தக்கது என்று இஸ்லாமிய சட்டத்துறை வரையறை செய்கின்றது ( டீநளறழசவா நவயடஇ 1991).

இக்கருத்தை அல் மாவர்தி (1994) பின்வருமாறு மேலும் வலியுறுத்துகிறார்.

> 'ஒருவர் தனது வீட்டுக்கு அல்லது மஸ்ஜிதுக்கு வருபவருக்கு நீதிபதியாக நியமனம் செய்யப்பட்டிருப்பின், தனது வீடு அல்லது மஸ்ஜித் அல்லாத இடங்களில் செய்யப்படுகின்ற தீர்ப்பு வலிதற்றதாகும். ஏனெனில், அந்த நீதிபதியின் நியமனம் அவரது வீடு அல்லது மஸ்ஜிதுக்கு மாத்திரம் என வரையறுக்கப்பட்டிருக்கிறது. அது அவரின் தீர்ப்புக்குரிய நிபந்தனையாகக் கொள்ளப்பட வேண்டியது.'

நீதிமன்றத்திற்குப் பொருத்தமான அமைவிடம் தொடர்பில் இஸ்லாமிய அறிஞர்கள் இடையே வாதங்கள் உண்டு. இஸ்லாத்தின் ஆரம்ப கால அனுபவமான மஸ்ஜிதே நீதிமன்றம் என்ற கருத்தை ஹன்பலி சிந்தனைப்போக்குடைய ஒரு பிரிவினர் தொடர்ந்தும் அனுமதிக்கின்றனர். மஸ்ஜிதை நீதிமன்றமாகக் கொள்ளும் இப்பாரம்பரியம் தொடர்ந்து பேணப்பட வேண்டியதும் வரவேற்கத்தக்கதுமாகும் என்பது ஹனபி, மாலிகி, சிந்தனைப் பிரிவினர்களின் கருத்தாகும் (அல்-மாவர்தி, 1994).

மாறாக, மஸ்ஜிதை நீதிமன்றமாகப் பாவிப்பது மஸ்ஜிதுக்குப் பங்கமானது. மக்கள் நடமாட்டத்தில் ஏற்படும் இரைச்சல், சத்தம் வழிபாட்டுக்கு இடைஞ்சலாகும். குளிப்பு கடமையான நிலையிலுள்ளவர்கள், புத்திசுயாதீனமற்றவர்கள், குழந்தைகள் போன்றோர் மஸ்ஜிதில் உள்நுழைவது மஸ்ஜிதின் தூய்மையைப் பேணத் துணை செய்யாது என ஷாபிஈ சிந்தனைப் பிரிவின் பெரும்பான்மையினர் வாதிடுகின்றனர் (அல்-மிர்ஸபாவி, 1991). அவர்கள் பின்வரும் நபிமொழியினைத் தமது வாதத்திற்குச் சான்றாக முன்வைக்கின்றனர்.

> 'குழந்தைகள், புத்திசுயாதீனமற்றவர்கள், உங்களது சப்தங்களை உயர்த்துதல், உங்களது வாக்குவாதங்கள், தண்டனைகளை நிறைவேற்றல், உங்களது வாள்களை உருவுதல், உங்களது கொடுக்கல், வாங்கல் போன்றவற்றை உங்களது மஸ்ஜிதை விட்டும் தூரப்படுத்துங்கள்' (இப்னு மாஜா:750)

மேலும், தீர்ப்பு வழங்கும் இடமாக மஸ்ஜிதையே பயன்படுத்த நிர்ப்பந்திக்கப்பட்ட நிலையில் நீதிபதி அதன் தூய்மையையும் புனிதத்துவத்தையும் பேணித் தீர்ப்பு வழங்க கடப்பாடுள்ளவர் என ஷாபிஈ பிரிவினர் கருதுகின்றனர் (அல்-ஸுஹைலி, 2002).

முஸ்லிம்கள் சிறுபான்மைச் சூழல் அமைவில் இஸ்லாமிய நீதிப்பரிபாலனத்திற்கு மஸ்ஜிதைப் பயன்படுத்த முடியும் என்பதில் ஷாபிஈ பிரிவினரும் உடன்படுகின்றனர் என்பதையே இது காண்பிக்கின்றது (அல்-ஷர்ஈனி, 1958). சிறுபான்மை முஸ்லிம் சமூகத்தில் நீதிமன்றம் உட்பட்டதான பன்முகச் செயற்பாட்டில் மஸ்ஜித் தொழிற்படுவதையே மஸ்ஜிதின் மீள் புனர்நிர்மானம் என்பதாக அறிஞர்கள் கருதுகின்றனர்.

அல்-மாவர்தி (1972) நியமிக்கப்பட்ட நீதிபதியின் வீட்டை நீதிமன்றமாகப் பயன்படுத்துவது தொடர்பில் உடன்படுகிறார். நீதிபதியின் வீடு நீதிமன்றமாகப் பயன்படுத்தப்படுவது தொடர்பில் இஸ்லாமிய அறிஞர்களிடையே ஒருமித்த கருத்து நிலவவில்லை எனக் கொள்ளலாம். நீதிபதி தனது வீட்டை நீதிமன்றமாகப் பாவிப்பது ஏற்புடையது என்பதை ஏற்போர், கலீபா உமர், உபை ஆகிய இருவருக்குமிடையில் ஏற்பட்ட தகராறின் போது, அவ்விருவரும் ஸைத் அவர்களின் வீட்டுக்குச் சென்று முறையிட்டமையும், ஸைத் அவர்கள் அவ்வீட்டிலேயே விசாரித்து தீர்ப்பு வழங்கியதையும் (பைஹகீ:21016) ஆதாரமாகக் கொள்கின்றனர். நீதிபதியின் வீடு, அவரது தனிப்பட்ட வாசஸ்தளமாக அமைந்திருப்பது அவரது கவனத்தைச் சிதறடிக்குமாறே அமையும் என்பது திண்ணம்.

இஸ்லாம் எதிர்பார்க்கும் நீதிப் பரிபாலனத்தின் நியாயத்திற்கும், வெளிப்படைத்தன்மைக்கும் வீடு துணை செய்யாது என்று கருதுவோர் இத்தகைய தீய விளைவுகளைக் கருத்திற்கொண்டே உமர் அவர்கள் வீட்டை நீதிமன்றமாகப் பயன்படுத்த தடைவிதித்துள்ளார்கள் என வாதிக்கின்றனர். வீட்டை நீதிமன்றமாகப் பயன்படுத்துவது தண்டனைக்குரியது எனக்குறிப்பிட்ட உமர் அவர்கள், அத்தகைய

வீட்டைத் தீயிட்டுக் கொளுத்துமாறு ஆணை பிறப்பித்தமை உணர்த்துகிறது என்பது இப்பிரிவினரின் வாதமாகும் (இப்னு பர்ஹூன், 2003).

**நீதிபதியின் நியாயாதிக்கம்**

நீதிபதியின் தீர்ப்பு வலிதாவதற்கு அவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். இதற்கமைய, அரச அதிகாரம் பெற்றிருந்த கலீபாக்கள், மன்னர்கள், கவர்னர்கள் தமது நீதிபதிகளுக்கு அதிகாரத்தை வழங்கினர். இவ்வதிகாரப் பகிர்வு நீதிபதியின் சுய ஆதிக்கத்தை வரையறை செய்யவில்லை எனலாம். ஆட்சியாளர்கள் தொடர்புற்ற வழக்கை விசாரித்து தீர்ப்பளிக்கும் அதிகாரத்தையும் நீதிபதி பெற்றிருந்தார். ஒரு தடவை அமீருல் மு.்.மினீன் உமர் அவர்களுக்கும், யூதனொருவனுக்குமிடையில் தகராறு ஏற்பட்ட போது அவ்விருவரும் நீதிபதி ஷுரைஹிடம் நீதிகேட்டுச் சென்றனர். கலீபா உமரின் வாதம் வலுவற்றதென்பதால் நீதிபதி ஷுரைஹ் யூதனுக்கு சார்பாகவே தீர்ப்பை வழங்கினார் என்ற சம்பவத்தைச் சான்றாக கொள்ளலாம் (அல்-உமரி, 2003).

நீதிபதிக்கு நியமனம் வழங்கிய ஆட்சியாளர்களின் இறப்பு அல்லது பதவியிழப்பு நீதிபதியின் நியமனத்தை இரத்துச் செய்வதாக அமையவில்லை. நிஸாமுல் முல்க் அத்தூஸி நீதிபதிகளை ஆட்சியாளர்களுக்குப் பதிலானவர்களாகவே கண்டு, அவர்கள் பூரண மரியாதையும், உயர்ந்த அந்தஸ்தும் கொண்டவர்கள் எனக் குறிப்பிடுகிறார் (டீநளறழசவா நவயட இ 1991).

ஆட்சி மாற்றம், கால, தேச வேறுபாடு போன்றவற்றிற்கேற்ப நீதிபதியின் நியாயாதிக்க எல்லை பொதுவானதாகவும் வரையறுக்கப்பட்டதாகவும் அமைந்திருந்தது. சிலபோது சமய விவகாரங்கள் மட்டுமன்றி அரச நிறுவனங்களின் நிருவாகமும் நீதிபதியின் நியாயதிக்க எல்லையினுள் உட்பட்டிருந்தது. மத்தியஸ்தத்தின் ஊடாக பிணக்குகளை சமரசம் செய்து வைத்தல் அல்லது சான்றுகளைப் பரிசீலித்து தீர்ப்பளிப்பதினூடாக உரிமைகளைப் பெற்றுக் கொடுத்தல், புத்திசுயாதீனம், சிறுபராயம் ஆகிய காரணங்களினால் சொத்தின் மீதான ஆதிக்கத்தை இழந்தவர்களைக் கட்டுப்படுத்துதல், அரச உடைமைகள், நிதியைப்பராமரித்தல், மரண சாசனங்களையும் உயில்களையும் நிறைவேற்றுதல், விதவைகள், விவாகரத்துப் பெற்ற பெண்களுக்கு திருமணத்தில் பொறுப்பாக இருத்தல், தண்டனைகளை நிறைவேற்றுதல், பொதுச் சொத்துக்களைக் கண்காணித்தல், சட்டத்தின் சாட்சியம் தொடர்பில் தேவையான விசாரணையை மேற்கொள்ளுதல், சக்தியுள்ளவன், பலவீனமானவனுக்கிடையில் சமத்துவத்தைப் பேணுதல், வழக்கின் வகையைப் பொதுவானது, குறிப்பானது எனத் தீர்மானித்தல் போன்ற தொழிற்பாடுகள் நீதிபதியிடமே இருந்துள்ளன.

**முறையீட்டு விண்ணப்பம்**

மேற்கூறப்பட்ட விவகாரங்களில் முறைப்பாட்டை நீதிபதியிடம் விண்ணப்பிக்கின்ற மரபை முஸ்லிம் சமூகம் இயல்பாகவே பழக்கப்படுத்திக் கொண்டது. 'நம்பிக்கை கொண்டோரே! நீங்கள் அல்லாஹ்வையும் இறுதிநாளையும் நம்பியிருந்தால், அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுங்கள். இத்தூதருக்கும், உங்களில் அதிகாரம் உடையோருக்கும் கட்டுப்படுங்கள். ஏதேனும் ஒரு விடயத்தில் நீங்கள் முரண்பட்டால் அதை அல்லாஹ்விடமும், இத்தூதரிடமும் கொண்டு செல்லுங்கள். இதுவே சிறந்ததும் மிக அழகிய விளக்கமுமாகும்' என்ற அல் குர்ஆன் (4:59) வாசகம் முன்னோடி சமூகமான நபித்தோழர்கள் தமது பிணக்குகளை, வழக்குகளை நபியவர்களிடம் முறையிட்டு தீர்வைப் பெறுவதற்கு வழிகோலியது. இதுவே பிணக்குகளின் தீர்வைப் பெறுவதற்கு நீதிபதியை நாடுதல் என்பதற்கான அடிப்படையாக அமைந்தது. அநீதிக்குட்பட்டவன் தனக்கு நியாயம் வேண்டி முறையிடுகின்ற வாசகம் வரையறையைத் தாண்டி அமைந்திருந்த போதிலும் அனுமதிக்கத்தக்கது என அல் குர்ஆன் (4:148) குறிப்பிடுவது நோக்கத்தக்கது. முறையீட்டாளன் பொய்யைத் தவிர்த்து உண்மை உரைப்பதுவே அவனது முறைப்பாடு ஏற்றுக் கொள்ளத்தக்கது என்பதற்கான நியமம் என அல்-ஹுமைழி (1989) வாதிக்கின்றார்.

முறைப்பாடு செய்யப்பட்ட பிரதிவாதியை அழைத்து விசாரணைக்குட்படுத்துதல் இஸ்லாத்தின் பாரம்பரியம். வாதியும் பிரதிவாதியும் தத்தமது நியாயங்களை வெளிப்படுத்துவதற்கு இப்பாரம்பரியம் வாய்ப்பை ஏற்படுத்தும். பிரதிவாதிக்கு எதிரான அழைப்பாணை அழகிய வடிவில் சிறந்த வார்த்தைப் பிரயோகத்தில் அமைதலே சிறப்புடையதாகும். 'நன்மையும் தீமையும் சமமாகாது. நல்லதைக் கொண்டே (பகைமையை) தடுப்பீராக! எவருக்கும் உமக்கும் பகை இருக்கிறதோ அவர் அப்போதே உற்ற நண்பராகி விடுவார்' என்ற அல் குர்ஆன் (41:34) வாசகம் தீமை நல்ல வழிகளில் தடுக்கப்படுவதையே விதந்துரைக்கிறது.

இத்தகைய அழைப்பாணைக்கேற்ப செயற்படுவது, பதிலளிப்பது பிரதிவாதியின் மீதுள்ள கடப்பாடாகவே இஸ்லாம் கருதுகிறது.

‘அவர்களிடையே தீர்ப்பளிப்பதற்காக அல்லாஹ்விடமும் அவனது தூதரிடமும் அழைக்கப்படும் போது அவர்களில் ஒரு பிரிவினர் புறக்கணிக்கின்றனர். உண்மை அவர்களுக்குச் சாதகமாக இருந்தால் அதற்குக் கட்டுப்பட்டு வருகின்றனர். அவர்களின் உள்ளங்களில் நோய் உள்ளதா, அல்லது சந்தேகம் கொள்கிறார்களா, அல்லது அல்லாஹ்வும் அவனது தூதரும் அவர்களுக்கு அநீதி இழைப்பார்கள் என்று அஞ்சுகிறார்களா?, இல்லை! அவர்களே அநீதி இழைத்தவர்கள். இவர்களிடையே தீர்ப்பு வழங்குவதற்காக அல்லாஹ்விடமும் அவனது தூதரிடமும் அழைக்கப்படும் போது ‘செவியுற்றோம்; கட்டுப்பட்டோம்’ என்பதே நம்பிக்கை கொண்டோரின் கூற்றாக இருக்க வேண்டும். அவர்களே வெற்றி பெற்றோர்’

என்ற அல் குர்ஆன் (24:51) வாசகம் அழைப்பாணைக்குப் பதிலளிக்க மறுக்கும் பிரதிவாதி இறைசாபத்திற்கும் ஈருலக தண்டனைக்கும் உரியவர் என எச்சரிக்கின்றது.

**அழைப்பாணை**

இறை சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான அழைப்பாணைக்குக் கட்டுப்பட்டு நீதிமன்றத்திற்குச் சமூகம் தருவது தவிர்க்க முடியாத அடிப்படைக் கடமை என்றே இஸ்லாமிய சட்ட நிபுணர்கள் துணிகின்றனர். கடுமையான நோய், வெளியேறிச் செல்வதில் உயிருக்கும் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல், பைத்தியம் பிடித்தல், சுய நினைவிழத்தல் ஆகியவை பிரதிவாதியொருவர் அழைப்பாணைக்குப் பதிலளிக்க விதிவிலக்களிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் என அல்-ஹுமைழி (1989) குறிப்பிடுகின்றார்.

பிரதிவாதி நீதிமன்றத்திற்குச் சமூகம் தர முடியாத நிலையில் அவரது பிரதிநிதி நீதிமன்றத்தின் விசாரணையை எதிர்கொள்வதை இஸ்லாம் ஏற்றுக்கொள்கிறது. விபச்சாரக் குற்றம் புரிந்த ஒரு பெண்ணை விசாரிப்பதற்கு மாற்று ஏற்பாட்டை நபி (ஸல்) அவர்கள் மேற்கொண்டமை அவதானிக்கத்தக்கது. (முஸ்லிம்:3502)

மேற்குறிப்பிட்ட சூழலன்றி நீதிபதியின் அழைப்பாணையை மறுப்பவருக்கெதிராக மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதை இஸ்லாமிய அறிஞர்கள் பரிந்துரைக்கின்றனர்.

1. நீதிமன்றத்திற்கு வருமாறு விடுக்கப்பட்ட எழுத்து மூல அழைப்பாணை பிரதிவாதிக்குக் கிடைத்து விட்டதை உறுதிப்படுத்துதல். இதற்கமைய, அழைப்பாணையைக் கொண்டு செல்பவர் பிரதிவாதியின் கையொப்பத்தைப் பெறுதல். பிரதிவாதி கையொப்பமிட மறுத்தல் அல்லது எழுத்தறிவற்றவராக இருத்தல் ஆகிய சந்தர்ப்பங்களில் அழைப்பாணை வழங்கப்பட்டு விட்டதை இரண்டு சாட்சிகள் மூலம் உறுதிப்படுத்துதல்.

2. பிரதிவாதி மேற்குறிப்பிட்ட எதற்கும் உடன்படாது, தொடர்ந்து புறக்கணிக்கும் போது நீதிமன்ற காவலாளர்களின் துணையுடன் வரவழைப்பது ஏற்புடையதாகும். ‘அவர்களிடம் திரும்பிச் செல்வீராக. அவர்களால் எதிர்க்க முடியாத படைகளுடன் நாம் அவர்களிடம் வருவோம்’ என்ற அல் குர்ஆன் (27:37) வாசகம், நீதிபதி முரண்டு பிடிக்கும் பிரதிவாதியை நீதிமன்ற காவலாளிகள், நீதிமன்ற உதவியாளர்கள் அல்லது பொலிஸாரின் துணையுடன் பிரதிவாதியின் நிலைமையைக் கண்டறிந்து தேவையேற்படின் நிர்ப்பந்தமாகவேனும் அவரை நீதிமன்றத்திற்கு வரவழைக்க வேண்டும் என்பதையே உணர்த்துகிறது என இஸ்லாமிய சட்டவியல் நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர் (இப்னு அபித் தம், 1987).

இத்தகைய பிரதிவாதிக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கையும், தலைமுடியை சிரைத்தல், சிறையிலிடுதல் போன்ற தண்டனையும் விதித்து நீதிபதி நீதிப்பரிபாலனத்திற்குத் துணை செய்தல் வேண்டும் (இப்னு பர்ஹுன், 2003).

நீதிமன்றத்திற்கு வர மறுக்கும் பிரதிவாதியை எச்சரித்து தண்டனை வழங்கும் முறைமை தொடர்பாக இப்னு குதாமா (1984) பின்வருமாறு விளக்கியுள்ளார்.

நீதிபதி தனது உதவியாளரை பிரதிவாதியின் வீட்டுக்கு அவனது அயலவர்கள் இருவரின் சாட்சியத்துடன் அனுப்பி அழைப்பு விடுப்பார். இவ்வாறு அவர் மூன்று நாட்கள் தொடர்ந்து அழைப்பு விடுப்பார். அவ்வாறு அழைப்பு விடுத்தும் சமூகமளிக்காத பிரதிவாதியின் வீட்டினை ஆணி அறைந்து முத்திரையிடுவார். இவ்வேளை அவ்வீடு பிரதிவாதிக்கு உரித்துடையது என்பதையும் அவ்வீட்டில் பிரதிவாதியைத் தவிர வேறெவரும் வசிக்கவில்லை என்பதையும் உறுதிப்படுத்தக்கொள்ள வேண்டும்.’

மேற்குறிப்பிட்ட நடவடிக்கைக்கும் பதிலளிக்காத பிரதிவாதியைத் தண்டிக்குமாறு நீதிபதி அரசினை வேண்டுவார் (அல்-ஹுமைழி, 1989).

**நீதிமன்ற ஆளணி**

நீதிமன்றத்தின் உத்தியோகத்தர்கள், அதன் பிரிவு, முக்கியத்துவம், அமைவிடம் போன்றனவற்றிற்கேற்பவே நீதிபதிகள் நியமனம் பெற்றுள்ளனர். குறைந்தபட்சம் ஒரு நீதிமன்றம் ஒரு செயலாளர் (காதிப்), ஒரு நீதிமன்ற உதவியாளரை (முஹ்ழிர்) கொண்டிருக்க வேண்டும். இவர்கள் தவிர்த்து ''நாஇப்'' எனும் துணை நீதிபதி, பிரதான செயலாளர், நிதியாளர், பதிவாளர் (முகய்யித்), செய்தி கொண்டு செல்பவர், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆகியோரும் பணிபுரிந்தனர்.

மிகப்பிரதான நீதிமன்றங்கள் நீதிபதிகளைப் பயிற்றுவிக்கின்ற வளவாளர்களையும் கொண்டிருந்தன. நீதிமன்றத்தின் செயலாளர் முறைப்பாடுகளையும் வாக்குமூலங்களையும் பதிந்து பாதுகாக்கும் நடவடிக்கையை மேற்கொள்வார். அவர் முறைப்பாடுகளுக்குத் தனியான பதிவேட்டைப் பேண வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டார். அவ்வேட்டில் முறைப்பாட்டின் விடயம், சாட்சி, வாதி, பிரதிவாதியின் வாக்குமூலங்கள் போன்றவைகளைப் பதிவு செய்வார் (அல்-ஸுஹைலி, 2002).

இஸ்லாமிய சட்டக்கலை நிபுணர்கள் நீதிமன்ற செயலாளர் (காதிப்) பெற்றிருக்க வேண்டிய தகைமைகளை விளக்கியுள்ளனர். இப்னு குதாமா, இப்னு பர்ஹுன் போன்ற இஸ்லாமிய சட்டக்கலை நிபுணர்கள் நீதிமன்ற செயலாளர் (காதிப்) பெற்றிருக்க வேண்டிய தகைமைகளை இவ்வாறு விபரிக்கின்றனர், 'செயலாளர் நீதமானவராக இருப்பது அவசியம். ஏனெனில், அவருடைய எழுத்துப்பணி (எழுத்து) அமானிதம் என்று இஸ்லாம் அடையாளப்படுத்தும் பொறுப்புக்களில் ஒன்றாகும். அவ்வமானிதம் தூய்மையான பேணுதலான நீதத்தின் மூலமன்றி நிலைத்து நிற்க முடியாது'. ஆயினும், சில சட்டக்கலை நிபுணர்கள் செயலாளர் பற்றிய நிபந்தனையை கருத்திற் கொள்ளாத போதிலும், மோசடி நிகழாமல் தவிர்ப்பதற்காக செயலாளர் நீதிபதியின் மேற்பார்வைக்கு உட்பட்டிருக்க வேண்டுமென பரிந்துரைக்கின்றனர் (அல்-மிர்ஸபாவி, 1991).

நீதிமன்றத்தின் செயலாளர் பதவிக்கு இஸ்லாத்தை சமயமாக கொண்டிருத்தல், கல்வித் தகைமையைப் பெற்றிருத்தல் போன்ற சில நிபந்தனைகளை இஸ்லாமிய சட்டத்துறை விதித்துள்ளது. அபூ முஸா அல்-அஷ்அரி அவர்களது செயலாளராக ஒரு கிறிஸ்தவர் பணி புரிந்தமையை உமர் அவர்கள் ஏற்கவில்லை. நீதிமன்றத்தின் விவாதப் பொருளாக இஸ்லாமிய சட்டம் அமைந்திருப்பதனால் அதனைச் சரியாகப் புரிந்து பதிவு செய்வதற்கு இஸ்லாமிய அறிவுப் புலமையின் தேவையை விருப்புக்குரிய நிபந்தனையாக இஸ்லாமிய சட்டத்துறை காண்கிறது என அல்-மிர்ஸபாவி (1991) குறிப்பிடுகிறார்.

பதிவில் ஏற்படும் குழப்பமும், சந்தேகமும் உரிமை மீறலுக்கு வழிகோலும் வாய்ப்பை ஏற்படுத்தும். நீதிமன்றம் வாதப்பிரதிவாதங்களோடு கூடிய ஒன்றாக அமைந்திருப்பதனால் நீதிமன்றத்தின் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்துதல் அதன் ஒழுங்கைப் பேணுதல் நீதிமன்றக் காவலர்களின் முக்கியமான பணி. இவர்களை 'நீதிமன்ற பொலிஸ்' என இப்னு ருஷ்த் நாமமிடுகிறார் (இப்னு பர்ஹுன், 2003). வாதி, பிரதிவாதிகளை வரவழைத்தல், பெயர் கூறி அழைத்தல், அமைதியைப் பேணுதல் போன்ற பணிகளில் இஸ்லாமிய வரலாற்றில் இவர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். நீதிபதியின் கட்டளையை எதிர்பார்த்து அவர் முன்னால் இவர்கள் நிற்பது இஸ்லாமிய பாரம்பரியங்களில் ஒன்றாகக் கொள்ளப்படுகிறது. கைஸ் இப்னு ஸஃத் அவர்கள் நபி (ஸல்) அவர்களுக்கு முன்னால் ஒரு தலைமை பொலிஸ் அதிகாரி போல் நிற்பார் என்ற நபிமொழியின் குறிப்பு (புகாரி:7155) இதற்கு ஆதாரமாக அமைகின்றது. நபி (ஸல்) அவர்களின் வாயில் முன்னால் நீக்ரோ அடிமை ரபாஹ் காவல் செய்தமை, அபூபக்ர் தனது அடிமை ஷதீஃப் என்பவரையும், உமர் அவர்கள் தனது அடிமை யர்பஃ என்பவரையும், கலிபா உஸ்மான் ஹம்ரான் என்பவரையும், கலிபா அலி தனது அடிமை குன்பர் என்பவரையும் 'ஹாஜிப்'களாக நியமித்திருந்தார்கள் என்பன இதனை மேலும் வலுவூட்டும் வரலாற்றுக் குறிப்புகளாகும் (பந்தர், 2000).

இஸ்லாமிய வரலாற்றில் மேற்கொள்ளப்பட்ட நீதிமன்ற முறை மாற்றத்திற்கும் பிரதேச வேறுபாட்டிற்குமேற்ப நீதிமன்றத்தின் பாதுகாப்பை, ஒழுங்கைப் பேணுவதற்கான உத்தியோகத்தர்கள் 'அரீப்', 'ஜில்வாஸ்', 'ஹாஜிப்', 'நகீப்', 'ஸாஹிபுல் மஜ்லிஸ்', 'ஸாஹிபு ஷுர்ததில் காழி' போன்ற பதவிப் பெயர்களிலும் அழைக்கப்பட்டுள்ளனர் (மத்கூர், 1964). இவ்வுத்தியோகத்தரை நீதிபதி நியமனம் செய்வார். ஆயினும், இவரை நீதிபதி நியமிக்கும் உரித்து தொடர்பில் சட்டத்துறையில் அபிப்பிராயப் பேதங்கள் உள்ளன.

துணை நீதிபதி, நீதிபதியினால் நியமனம் பெற்ற அவரின் முகவராக செயற்படுவார். அவர் நீதிபதிக்குப் பதிலாக அல்லது குறித்த விஷேட விவகாரங்கள் தொடர்பான தீர்ப்பை வழங்குவதற்கு அதிகாரம் பெற்றவர். மேலும், நீதிபதியின் நோய், ஹஜ் போன்ற வெளியூர் பயணம் ஆகிய சந்தர்ப்பங்களின் போது பதில் நீதிபதியாகச் செயற்படுவார். எனவே, அவர்களும் நீதிபதிகள் என்று அழைக்கப்பட்டதுண்டு. துறைசார் நிபுணராகக் காணப்பட்ட துணை நீதிபதி, நீதிபதிக்கு நிபுணத்துவ

ஆலோசனையை வழங்குபவராகக் காணப்பட்டார். பதினெட்டாம் நூற்றாண்டில் துணை நீதிபதி நீதிப்பரிபாலனத்தை நிர்வகிப்பவராக நியமனம் பெற்றார்.

நீதிமன்றங்களில் மொழிபெயர்ப்பாளர்களின் உதவி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. பன்மைத்துவ சமூகத்தைக் கொண்ட இஸ்லாமிய சாம்ராஜ்ஜியத்தில் பல மொழிகளைப் பேசுவோர் காணப்பட்டனர். நீதிபதிக்குப் புரியாத மொழியை வாதி, பிரதிவாதி அல்லது சாட்சி தமது மொழியாகக் கொண்டிருந்த போது, மொழிபெயர்ப்பாளரின் பணி முக்கியத்துவமிக்கதாக அமைந்தது. நீதிபதியின் தீர்ப்பு மொழிபெயர்ப்பை மையப்படுத்தியே அமைந்திருப்பதால் மொழிபெயர்ப்பாளரின் நம்பகத்தன்மை பிரதானமானதாகக் கொள்ளப்பட்டது (அல்-மிர்ஸபாவி, 1991).

நீதிபதி நிபுணத்துவக் குழுவின் உதவியைப் பெறுவது வழக்கமாக அமைந்தது. குறித்ததோர் வழக்கு இஸ்லாமிய சட்டத்தின் நுணுக்கத்தோடு, சிக்கலானதாகவும் நிபுணத்துவ அறிவையும் வேண்டி நின்ற போது நீதிபதி இவர்களின் ஆலோசனையை நாடினார். நீதிபதி சட்டத்துறை நிபுணராக அமையாத போது இவர்களது பங்களிப்பு அவசியமெனக் கொள்ளப்படும். இஸ்லாமிய வரலாற்றில் முப்தி இஸ்லாமிய ஷரீஆ பற்றிய தீர்வைப் பெறுவதில் நீதிபதிக்குத் துணையாக அமைவது வழக்கமாகும். உஸ்மானிய (மஹ்கமா) நீதிமன்றம் இத்தகைய நிரந்தரமான நிபுணத்துவ சபையைக் கொண்டிருந்ததாக அறிய முடிகின்றது. இதுதவிர, நீதிபதியின் தீர்ப்பு ஒரு நிபுணத்துவ சபையினர் முன்னிலையில் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டது. (ஆயளரன நவ யட, 2006)

வழக்காளி சட்ட ஆலோசகர்களின் உதவியைப் பெறுதல் ஆரம்பகால இஸ்லாமியப் பாரம்பரியமாக அமையவில்லை. அடிப்படையில் இஸ்லாமிய நீதிமுறைமை சட்ட உதவி நிறுனத்தை அங்கீகரிக்கவில்லை (டீநளறழசவா நவயடஇ 1991). ஆயினும், வகீல் அல்லது சட்டத்தரணியின் சட்ட உதவியைப் பெறுவது தொடர்பில் இஸ்லாமிய சிந்தனைப்பிரிவுகளிடையே கருத்து முரண்பாடு இல்லை. இஸ்லாமிய நீதிமன்றங்களில் வகீலின் சட்ட பிரதிநிதித்துவம் பெறும் முறைமை பரவலான பயன்பாட்டிலேயே அமைந்திருந்தது. தனிநபர்கள் தனியான சட்ட பிரதிநிதிகளின் உதவியைப் பணம் செலுத்திப் பெற்றனர். இத்தகைய முகவர்கள் 'த.்.வா வகீலி' என அழைக்கப்பட்டனர். உஸ்மானிய நகர்களில் இவர்கள் ஒரு நிபுணத்துவக் குழுவாக காணப்பட்டனர் என்று வரலாற்றுக் குறிப்பொன்று உண்டு. வகீல் என்ற நிறுவனம் இஸ்லாமியப் பாரம்பரியமாகவே தொடர்ந்து கொள்ளப்படுகிறது.

எனவே, வாதி அல்லது பிரதிவாதி தமது வழக்கை வகீலிடம் ஒப்படைத்து, நீதிமன்றத்திற்குச் சமூகம் தராமலிருத்தல் ஏற்புடையது. 'நீர் மோசடிக்காரர்களுக்கு வழக்காடுபவராக இருக்க வேண்டாம்.' எனும் அல் குர்ஆன் (4:105) வாசகம் வகீலின் சட்ட உதவியை அங்கீகரிக்கிறது. ஆயினும், அல்காழி அபூ ய.்.லா, இப்னுல் அரபி போன்ற ஹன்பலி, மாலிகி சிந்தனைப் பிரிவினர் போலியாக வாதிடுவதற்கு வகீல் நியமிக்கப்படுவதை அனுமதிக்கவில்லை (அல்-குர்துபி, 2003). வகீலின் வாதத்திறமை எதிராளியின் உரிமையை நிலைநாட்டுவதற்குத் தடையாக அமையலாம். எனவே தான், ஒரு தரப்பினர் வழக்காடுவதற்கு வகீலை நியமனம் செய்ய எதிராளியின் ஒப்புதலைப் பெற வேண்டுமென இமாம் அபூ ஹனீபா நிபந்தனை விதிக்கின்றார். ஆயினும், ஒருவர் நோய் அல்லது நீண்ட தூரப் பயணத்தினால் சமூகம் தர முடியாத வேளையில் வகீலை நியமிப்பது ஏற்புடையது என்கிறார்.

**நீதிமன்ற முகாமைத்துவம்**

அல்-மிர்ஸபாவி (1991) நீதிமன்றத்தின் செயலாளர், வழக்காளிகளின் வருகைக்கேற்ப அவர்களைப் பதிவு செய்தல், வாதி, பிரதிவாதியின் பெயரைக் குறித்தல் போன்ற செயற்பாடுகளினூடாக நீதிமன்றத்தின் ஒழுங்கமைப்புக்கும், முகாமைத்துவத்துக்கும் துணை செய்வார். ஆண், பெண் என்ற வேறுபாட்டில் நீதிமன்றத்தின் இருக்கை ஆண்கள், பெண்களுக்கான தனித்தனியான பகுதிகளைக் கொண்டிருக்கச் செய்வதும், உரிய இருக்கைகளில் ஆண்களையும், பெண்களையும் அமரச் செய்வதும் செயலாளரின் பொறுப்பாகும். சமூக அந்தஸ்தின் அடிப்படையில் வழக்காளிகள் முற்படுத்தப்படுவது இஸ்லாத்தில் ஏற்புடையதல்ல. வருகை ஒழுங்கிற்கு ஏற்ப வழக்குகள் பரிபாலிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்படும். குறித்த நாளில் தீர்ப்பளிக்க முடியாத வழக்குகள், நிர்ணயிக்கப்பட்ட வேறொரு நாளுக்குப் பிற்போடப்படல் வேண்டும்.

அல்-மிர்ஸபாவி (1991) வழக்குகளை ஒழுங்குபடுத்துவதில் பின்வரும் முறைகளை விதந்துரைக்கின்றார்.

1. வெளியூர் பிரதேசத்தவர் சம்பந்தப்பட்ட வழக்கு முற்படுத்தப்படல் வேண்டும். கலீபா உமர் அவர்கள் 'வெளியூர் பிரதேசியை முற்படுத்துவீராக. அவ்வாறு செய்யாவிடின் அவன் ஊர் திரும்பி விட்டால், அவனது நீதிபெறும் உரிமை தவறிவிடும். அவனது உரிமையை வீணடித்தவராக நீர் மாறிவிடுவீர்' எனக் குறிப்பிட்டமை ஆதாரமாகக் கொள்ளப்படுகிறது. அதிகமான தூர பிரதேசவாதிகள் அமையும் சந்தர்ப்பத்தில் அவர்கள் அனைவரதும் வழக்கை முற்படுத்துதல் உள்ளூர்வாசிகளின் நலன்களைப் பேணாது எனும் போது, இரு சாராரிலிருந்தும் ஒவ்வொருவர் எனும் வகையில் விசாரணை முன்னெடுக்கப்படல் வேண்டும்.

2. சாட்சிகளுடன் சமூகம் தந்துள்ள வழக்காளிகளை முற்படுத்துவது ஏற்புடையதாகும். வழக்கொன்றின் தீர்வுக்கு சாட்சிகளின் துணை முக்கியமானது. அவர்களை காத்திருக்கச் செய்தல், 'சாட்சிகளைச் சங்கைப்படுத்துங்கள். அவர்கள் மூலமே அல்லாஹ் உரிமைகளை உயிர்ப்பிக்கின்றான்' என்ற நபிமொழியின் அறிவுறுத்தலை மீறியதாக அமையலாம்.
3. பெண் வழக்காளிகளை முற்படுத்தும் முறை ஆகுமானதாகும். நீண்ட நேரம் பெண்கள் வீட்டுக்கு வெளியே தரித்திருப்பது, ஆண்-பெண் கலப்பு, ஒழுக்கச் சீர்கேட்டுக்கு வழிகோலுதல் போன்றன இதற்கான நியாயமாக அமைகிறது. பெண்களுக்கான தனியான நீதிமன்ற அமர்வை ஏற்படுத்துவதை சிறந்ததோர் மரபாகவே இஸ்லாமிய அறிஞர்கள் காண்கின்றனர்.

**நீதிமன்ற அமர்விற்கான நேரம்**

நீதிமன்றக் காரியாலயம் மிகப்பிரதான சமயக் காரியாலயமாக கருதப்படுதல் வேண்டும். நிஸாமுல் முல்க் அத்தூஸி நீதிபதியின் காரியாலயத்தை உயரிய பெறுமானமிக்க ஒன்றாகக் கருதுகின்றார். ஏனெனில், நீதிபதிகள் முஸ்லிம்களது உடைமைகள், உயிர்கள் மீதே அதிகாரமளிக்கப்பட்டுள்ளனர். மேலும், நீதிமன்றக் காரியாலயம் மக்கள், அரசு ஆகிய இரண்டின் மீதும் தொடர்புபட்ட ஒன்றாக இருப்பதனால், இஸ்லாமிய வரலாற்றில் காரியாலய உட்கட்டமைப்பு வசதியை ஏற்படுத்துவதில் அரசு கரிசனை கொண்டிருந்தது. நீதிமன்ற விவகாரம், தொழிற்பாடு, நிதி முறைமை தொடர்பான நியதிகளைக் கொண்ட சுற்று நிருபத்தை உஸ்மானிய அரசு கொண்டிருந்தது (டீநளறழசவா நவயடஇ 1991).

நீதிமன்ற காரியாலய நடவடிக்கைக்கான நேரம் தொடர்பில் இஸ்லாமிய மூல ஆவணங்கள் எவ்வித வரையறையையும் குறிப்பிடவில்லை. எனினும், நீதிபதியினதும் வழக்காளியினதும் நிலைமைகளையும் வசதிகளையும் கருத்திற்கொண்டு, குறித்த சில நேரங்களை ஏற்புடையதாகவும் சிறந்ததாகவும் கருத முடியும் என்கிறார் அல்-ஸர்ஹஸி (1912). இஸ்லாத்தில் நீதிப் பரிபாலனம் ஒரு வழிபாடாகும். எனவே, நீதிபதி நீதி வழங்குவதற்கு அல் குர்ஆன் (11:114) வழிபாட்டிற்குச் சிறந்ததென சிறப்பித்துக் கூறும் பகலின் இரு ஓரங்களிலும் அமர்வது ஏற்புடையது. இந்நேரங்கள், இயல்பானதாகவும், சாந்தமானதாகவும் இருக்கும் என்பது அவரது வாதம். அதற்காக மிக அதிகாலையில் வழக்கை ஆரம்பிக்க முடியாது. அதிகாலையில் வழக்குக்கு வருபவர்களை 'இரவிலேயே முறையிட வந்துவிட்டீர்களா' என கடிந்து கொண்டார் நீதிபதி ஷுரைஹ் (அல்-ஸர்ஹஸி,1912).

நீதிமன்ற வழக்கு முன்னெடுப்புக்கான பொருத்தமான நேரம் குறித்து இப்னு பர்ஹூன் (2003) பின்வருமாறு விபரிக்கின்றார்.

> 'நீதிபதி தனது அமர்வை மக்களது வா்ழ்க்கைக்கும் உழைப்புக்கும் இடைஞ்சல் இல்லாதவாறு அமைத்துக் கொள்ள வேண்டும். மஃரிபுக்கும் இஷாவுக்கும் இடைநேரத்தில், ஸஹர் வேளையில் அவசியம் ஏற்பட்டாலேயன்றி அமரக் கூடாது. இரு பெருநாள் தினங்கள், அறபா தினம், ஹஜ்ஜுக்கு மக்கள் பயணிக்கும் தினம், திரும்பி வரும் தினம், விழா நாட்கள், கவலை அல்லது சந்தோசமான நிகழ்வுகள், அடை மழைப்பருவம் போன்ற சந்தர்ப்பங்களில் நீதிபதி தனது அமர்வை மேற்கொள்ளுதல் கூடாது.'

இவ்வாறே, நீதிபதி தனது தனிப்பட்ட தேவைகளுக்கும், நலன்களைப் பேணுவதற்கும் சில நாட்களை ஒதுக்கிக் கொள்வது, அவர் நீதிமன்ற விவகாரங்களில் முழுமையாக ஈடுபாடு கொள்வதற்குத் துணை செய்யும். மேலும், நீதிபதி தனது அமர்வைத் தானும், தன்னோடு தொடர்புபட்டவர்களும் களைப்படையும் வரை நீடிக்கக் கூடாது என்பது சட்டவியலாளர்களின் பரிந்துரையாகும். ஒரு நீதிபதி ஒரு வாரத்திற்கு ஏழுக்கும் குறைந்ததாக போதிய அமர்வை நடாத்த வேண்டும். சனி, திங்கள், வியாழன் ஆகிய நாட்களில் மூன்று அமர்வுகளை நடாத்துவது உகந்ததென்கிறார் அல்-மாவர்தி (1994). வழக்கின் எண்ணிக்கையும், தன்மையும் அமர்வின் எண்ணிக்கையைத் தீர்மானிக்க வல்லது. வழக்கின் நேர அட்டவணையைக் குறிப்பதற்கு நீதிபதி ஒரு தனிப்பட்ட குறிப்பேட்டை வைத்திருத்தல் வேண்டும். நிஸாமுல் முல்க் அத்தூஸி குற்றவியல் நீதிமன்றம் ஒரு வாரத்தில் இரு தடவை தனது அமர்வை நடாத்துவதை வரவேற்றுள்ளார் (டீநளறழசவா நவயடஇ 1991).

**முடிவுரை**

இஸ்லாத்தில் நீதிப் பரிபாலனம் நிருவனமயப் படுத்தப்பட்டிருந்தது. நீதிமன்றக் கட்டமைப்பும் தொழிற்பாடும் பற்றிய ஒழுங்கு முறை இஸ்லாமிய வரலாற்றில் பரிணாம வளர்ச்சி பெற்றுள்ளது. முஸ்லிம் ஆட்சிப் பிரதேசத்தில் நீதி வலயங்கள் ஏற்படுத்தப்பட்டு தகைமையின் அடிப்படையில் நீதிபதிகள் நியமனம் செய்யப்பட்டனர். பிரதம நீதியரசரின் (காழி அல்-குழாத்) கீழ் செயற்பட்ட நீதிபதி ஒருவர் அதிகார வரம்பையும் நியாயாதிக்க எல்லையையும் கொண்டவர். நீதிமன்றம் முறையீட்டு விண்ணப்பம், அழைப்பாணை, வழக்கு வகைகள், விசாரணை நேரம், ஆளணி, முகாமைத்துவம் என ஓர் ஒழுங்கமைப்பு அல்லது வடிவம் என்பனவற்றைக் கட்டமைத்துக் காணப்பட்டது. எனவே, இஸ்லாத்தில் நீதிப் பரிபாலனம் தற்கால பாரம்பரிய நீதிமன்றங்களை விட, பொது மக்களின் நலனைக்

கருத்திற் கொண்ட அதேவேளை, சட்டவாக்கத்திலும் நியாயாதிக்கத்திலும் முழு அதிகாரம் கொண்ட முறைமையாக நீதிமன்றக் கட்டமைப்பை வரையறை செய்கிறது.

**உசாத்துணைகள்**


1. அப்த் அல்-அஸீஸ் ஆல அல்-ஷைஹ் (1990) *லம்ஹாத் ஹவ்ல அல்-கழா பி அல்-மம்லகதில் அரபிய்யதிஸ் ஸுஊதிய்யா.* றியாழ்: ஆலமுல் பவாயித்.
2. அப்த் அல்-கரீம் ஸைதான் (1989) *நிழாமு அல்-கழா பில்-ஷரீஅத் அல்-இஸ்லாமிய்யா.* ஜோர்தான்: மக்தபதுல் பஷாயிர்.
3. அப்த் அல்-ஹஸீப் அப்த் அல்-ஸலாம் யூஸுப் (1986) *அல்-காழி வ அல்-பய்யினா.* குவைத்: மக்தபதுல் ம∴லா.
4. அல்-உமரி, அக்ரம் லியா (2003) *அஸ்ருல் கிலாபத் அல்-ராஷிதா.* 4ம் பதிப்பு. ரியாழ்: மக்தபதுல் உபைகான்.
5. அல் குர்துபி (2003) *அல்-ஜாமி∴ லி அஹ்காம் அல்-குர்ஆன் (தப்ஸீர் அல் குர்துபி)*, பேய்ரூத்: ஆலமுல் குதுப்.
6. அல்-மாவர்தி (1972) *அதப் அல்-காழி*, பக்தாத்: மத்பஅதுல் ஆபி.
7. அல்-மாவர்தி (1994) *அல்-அஹ்காம் அல்-ஸுல்தானிய்யா வ அல்-விலாயாத் அல்-தீனிய்யா*, லெபனான்: தாருல் கிதாப் அல் அரபி.
8. அல்-மிர்ஸபாவி, ஜமால் ஸாதிக் (1991) *நிழாமு அல்-கழா பி அல்-இஸ்லாம் இதாரது அல்-ஸகாபா வ அல்-நஸ்ர்.* ஸஊதி அரேபியா: ஜாமிஅதுல் இமாம் முஹம்மத் இப்னு ஸுஊத் அல் இஸ்லாமிய்யா.
9. அல் ஹுமைழி, அப்துர் ரஹ்மான் (1989) *அல்-கழாஉ வநிழாமுஹு பி அல்-கிதாபி வ அல்-ஸுன்னா.* மக்கா: ஜாமிஆ உம்மில் குரா.
10. அல்-ஷர்ஙனி, முஹம்மத் இப்னு அஹ்மத் (1958) *முக்னி அல்-முஹ்தாஜ்.* பா. 04. எகிப்து: முல்தஸமுத் தப∴ வந்நஷ்ர்.
11. ஷலபி, அஹ்மத் (1975) *தாரீகுத் தஷ்ரீய் அல்-இஸ்லாமி வ தாரீகு அல்-நுழும் அல்-கழாஇய்யா பி அல்-இஸ்லாம்.* கெய்ரோ: மக்தபதுந்நஹ்லா அல் மிஸ்ரிய்யா.
12. அஸ் ஸுஹைலி, வஹபத் (2002) *அல்-பிக்ஹ் அல்-இஸ்லாமி வஅதில்லதுஹு.* 2ம் பதிப்பு. லெபனான்: தாருல் பிக்ர்.
13. அல்-ஸர்ஹஸி, ஷம்ஸுத்தீன் (1912) *அல்-மப்சூத்.* பேய்ரூத்: தாருல் ம∴ரிபா.
14. இப்னு அபித் தம், அல்-காழி இப்றாஹீம் (1987) *கிதாபு அதப் அல்-கழா*, பேய்ரூத்: தாருல் குதுப் அல் இல்மிய்யா.
15. இப்னு குதாமா (1984) *அல்-முக்னீ பி அல்-பிக்ஹ் அல்-ஹன்பலி.* பேய்ரூத்: தாருல் பிக்ர்.
16. இப்னு பர்ஹுன் (2003) *தப்ஸிரத் அல்-ஹுக்காம் பீ உஸுல்அல்-அக்ழியதி வ மனாஹிஜ் அல்- அஹ்காம்.* ரியாழ்: தாரு ஆலமில் குதுப்.
17. இப்னு அல்-கய்யூம் (2002) *இ∴லாம் அல்-முவக்கிஈன்.* ரியாழ்: தாரு இப்னில் ஜவ்ஸி.
18. தப்யானி, பந்தர் (2000) *தாரீகு அல்-கழா.* ஸஊதி அரேபியா: வஸாரதுத் த∴லீம் அல் ஆலி.
19. தபரி (1997) *ஜாமிஉ அல்-பயான் (தப்ஸீர் அத்தபரி).* டமஸ்கஸ்: தாருல் கலம்,
20. புஆத் அப்துல் முன்இம் அஹ்மத் (1996) *இப்னு கல்தூன் வறிஸாலதுஹு லி அல்-குழாத்.* றியாழ்: தாருல் வதன்.
21. புகாரி (1987) *அல் ஜாமி∴ அல்-ஸஹீஹ் அல்-முக்தஸர்.* பேய்ரூத்: தாரு இப்னில் கதீர் அல்யமாமா.
22. பைஹகீ (1925) *அஸ்ஸுனன்அல்-குப்ரா.* ஹைதராபாத்: மஜ்லிஸ் தாஇரதில் மஆரிப்.
23. மத்கூர், முஹமத் ஸலாம் (1964) *அல்-கழா பி அல்-இஸ்லாம்.* எகிப்து: தாருந் நஹ்லா அல் அரபிய்யா.
24. முஸ்லிம் அல்-நைஸாபுரி. *ஸஹீஹ்முஸ்லிம்.* தாரு இஹ்யா லித்துராஸில் அரபி, பேய்ரூத்

25. வகீஉ (918) *அஹ்பார் அல்-குழாத்.* லெபனான்: ஆலமுல் குதுப்.
26. C.E. Besworthet al, *Encyclopedia of Islam*, London: B J Brill, 1991, V.6
27. MK Masud et al (2006) *Dispensing Justice in Islam: Qadis and their judgement*, Netherland: Brill